# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2011 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்*

---

*(2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2011, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

**2011 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,**
**நிதி (திருத்தச்) சட்டம்**

[*2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது*]

*ச.வ-.ஓ. 6/2011*

**2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம், 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டம், 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என்பவற்றைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

பாகம் I

**2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I ஐத் திருத்துதல்**

*2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் பாகம் I இன் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

**2.** 2006 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I அதன் 2 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் “இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும்” என்பதிலிருந்து ‘‘கணிப்பிடப்படுதல் வேண்டும்.” என்பது வரையிலான சொற்களுக்கும், இலக்கங்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

“(ii) இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன் பின்னரும் -

(அ) மேலேயுள்ள (i) ஆம் பந்தியின் நியதிகளின்படி அதன்கண் குறிப்பீடு செய்யப்பட்ட சலுகையைத் தனக்காகப் பயன்படுத்தியவரான தனியாள் ஒவ்வொருவரிடமிருந்தும் அல்லது 2001, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கி 2011, மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடையும் தொடர்ச்சியான ஐந்து வரிமதிப்பீட்டாண்டுகளைக் கொண்ட ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் ; அல்லது

(ஆ) மேலேயுள்ள (i) ஆம் பந்தியின் நியதிகளின்படி அதன்கண் குறிப்பீடுசெய்யப்பட்ட சலுகைகளைத் தனக்காகப் பயன்படுத்தியிராத தனியாள் ஒவ்வொருவரிடமிருந்தும் அல்லது 2001 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று தொடங்கும் தொடர்ச்சியான பத்து வரிமதிப்பீட்டாண்டுகளைக் கொண்ட ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் –

விடயத்திற்கேற்ப, 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் அல்லது 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நியதிகளின்படி வருமானவரி செலுத்தியுள்ள தனியாள் ஒவ்வொருவரிடமிருந்தும்''.

பாகம் II

**2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் Iஐத் திருத்துதல்**

*2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் Iஇன் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**3**. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I (சமூகப் பொறுப்புடைமை அறவீட்டை விதிப்பனவு செய்தல்) (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதன் 2 ஆம் பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கஞ்செய்து (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் :-

''(இ) 2008 சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்கி –

(i) 2010 நவெம்பர் 22 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு (52 ஆம் அத்தியாயமான) உற்பத்தித் தீர்வைக் கட்டளைச் சட்டத்தினதும் (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தினதும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினதும்

கீழ் அறவிடற்படற்பாலதான சமூகப் பொறுப்புடைமை அறவீடு தொடர்பிலும் அத்துடன்

(ii) 2011 மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அறவிடப்படற்பாலதான சமூகப் பொறுப்புடைமை அறவீடு தொடர்பிலும் 1.5 சதவீதத்திலான அறவீடொன்றும் :";

(2) அப்பிரிவிற்கான இரண்டாம் காப்புவாசகத்தின் உட்பந்தி (ii)ஐ நீக்கம்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பந்தியை இடுவதன்மூலமும் :-

"(ii) 2011 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று ஆனால் 2011 ஏப்பிறல் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் காலப்பகுதி தொடர்பில் 1.5 வீதம் சதவீதப்படி கணிப்பிடப்படுதல் வேண்டும் :";

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை (சமூகப் பொறுப்புடைமை அறவீட்டை விதிப்பனவு செய்தல் தொடர்பில்) அந்த அட்டவணையின் 6 ஆம் விடயத்திற்குப் பதிலாகப் பின்வரும் புதிய விடயத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"6. 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் (அத்தியாயங்கள் XVI, XVII, XXI மற்றும் பிரிவுகள் 35, 65 என்பவற்றின் ஏற்பாடுகளைத் தவிர) அத்தகைய சட்டம் ஏதேனும் கம்பனிக்கும் 2008 ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின் னர் தொடங்கி 2011 மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடையும் ஏதேனும் காலப்பகுதிக்கும் ஏற்புடையதாகுகின்ற வாறு அந்தளவில்.".

பாகம் III

**2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IIஐத் திருத்துதல்**

*2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**5**. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II (பங்குக் கொடுக்கல்வாங்கல் அறவீட்டை விதித்தல்) அதன் 7 ஆம் பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுவதன்மூலம் 2011, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து இத்தால் திருத்தப்படுகின்றது :-

"பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீட்டை விதித்தல்.

**7**. பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடு என அழைக்கப்படவேண்டிய அறவீடொன்று கொள்வனவாளர் அத்துடன் விற்பனையாளர் ஒவ்வொருவரிடமிருந்தும் பங்குத்தொகுதிப் பரிவர்த்தனையொன்றின்மூலமாக நடாத்தப்படும் வியாபாரக் கொடுக்கல்வாங்கல் ஒவ்வொன்றினதும் மொத்த விற்பனை வரவின்மீது -

(அ) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று ஆனால், 2011, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்கு 0.2 சதவீதப்படியும் ; அத்துடன்

(ஆ) 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப் பகுதிக்கு 0.3 சதவீதப்படியும்

விதிக்கப்படுதல் வேண்டும்.".

*நட்டோத்தரவாதம்.*

**6**. இச்சட்டத்தின் இப்பாகத்தின் நியதிகளின்படி 2011, சனவரி 1 ஆம் தேதியன்று தொடங்குவதும் இச்சட்டம் தொடங்கும் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதியின்போது பங்குக் கொடுக்கல் வாங்கல் அறவீடு உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியால் விதிக்கப்பட்டு சேகரிக்கப்படுமிடத்து அத்தகைய அறவீடு செல்லுபடியாகும் விதத்தில் அறவிடப்பட்டு சேகரிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் மேற்கூறப்பட்ட அறவீட்டின் சேகரிப்பு தொடர்பில் ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்து உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி இத்தால் நட்டோத்தரவாதம் செய்யவும்படுகின்றார்.

## பாகம் IV

## 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IIIஐத் திருத்துதல்

*2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**7**. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் III (நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு) அதன் 13 ஆம் பிரிவில் 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவை அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன்மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப், பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(2) நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு எதுவும் நிதியமைச்சரால் அங்கீகரிக் கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு 2011 சனவரி 1 ஆம் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் செய்துகொள் ளப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பில் அவற்றின் ஒப்பந்தப் பெறுமதியின்மீது செய்துகொள் ளப்பட்டு இலங்கையில் வலுவுக்கிடப்படவுள்ள ஏதேனும் நிர்மாண ஒப்பந்தத்தின்மீது அறவிடப்படுதலாகாது.".

## பாகம் V

## 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் IIஐத் திருத்துதல்

*2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தில் புதிய பாகம் IIஅ வினை உட்புகுத்துதல்.*

**8**. 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச்சட்டத்தின் 13 ஆம் பிரிவை (பாகம் II) உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக் கத்தின் பாகம் IIஅ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறு தலும் வேண்டும் :-

"பாகம் IIஅ

## ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலுள்ள அறைகளின்மீதான விதிப்பனவு

*அறைக் கட்டணங்கள் நூற்றி இருபத்தைந்து அமெரிக்க டொலருக்கும் குறைவாக இருக்குமிடத்து ஐந்து நட்சத்திர ஹோட்டல் களால் அறவீட்டின் கொடுப்பனவு.*

13அ. (1) 2011 ஏப்பிறல் 1 ஆம் தேதியலிருந்து, 2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உல்லாசப் பயணச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப் பட்ட விலை ஒழுங்குவிதிக்கட்டளையின் நியதி களின்படி குறைந்தபட்ச வீதத்தின் நோக்கத்துக்கு "ஐந்து நட்சத்திர ஹோட்டல்" ஒன்றாக வகுப்பாக் கம் செய்யப்பட்ட கொழும்பு மாநகர சபையினதும் தெஹிவளை-கல்கிசை மாநகர சபையினதும் அதிகார இடப்பரப்பின் எல்லைகளுக்குட்பட்ட ஹோட்டல் ஒவ்வொன்றும், எந்த அறைகள் தொடர்பில் அத்தகைய ஹோட்டல் நூற்றி இருபத்தைந்து அமெரிக்க டொலருக்கும் குறைவான வீதப்படி அறவிடுகின்றதோ அந்த அறைகளை அத்தகைய ஹோட்டல் கொண்டிருக்குமாயின், அத்தகைய ஹோட்டலிலிருக்கும் அறை ஒவ் வொன்று தொடர்பிலும் இருபது அமெரிக்க டொலர் அல்லது இலங்கை ரூபாவில் அதற்குச் சமமான அறவீடொன்றைச் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட அறவீடு இந்நோக்கத்திற்கென (3) ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளில் குறித்துரைக் கப்பட்டவாறான அத்தகைய முறையில் செலுத்தப் படுதலும், 2011 ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கும் ஒவ்வொரு மாதம் தொடர்பிலும்

2005 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உல்லாசப் பயணச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளரால் சேகரிக்கப்படுதலும் வேண்டும். அத்தகைய அறவீடு அத்தகைய தொகை வருமதியாக வருகின்ற மாதத்தின் கடைசி நாளிலிருந்து பதினைந்து நாட்களினுள் தவிசாளரினால் சேகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சேகரிக்கப்பட்ட தேதியிலிருந்து, ஏழு நாட்களுக்குள் அது திரட்டு நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படுதலும் வேண்டும்.

(3) அமைச்சர் இப்பிரிவின்கீழ் அறவீட்டைச் சேகரித்து அனுப்புதல் தொடர்பில் காலத்துக்குக் காலம் வழிகாட்டுநெறிகளை வழங்கலாம்.".

பாகம் VI

## 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இனைத் திருத்துதல்

**9**. (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :- *1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

''ஆடம்பர மோட்டார் வாகன ஆண்டு அறவீடு.

3. (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றை அல்லது பார வண்டியொன்றைத் தவிர) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும் -

(அ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் வருமிடத்து, 1995, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் 2011, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கும், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ; அத்துடன்

(ஆ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் வருமிடத்து, 2011, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கும், இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் பாகம் II இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும்,

ஆடம்பர மோட்டார் வாகன அறவீடொன்று அறவிடப்படுதலும், விதிக்கப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான அறவீடு, இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆடம்பர மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன ஆண்டு அறவீடு.

**4**. (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வானமொன்றை அல்லது பாரவண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும்-

(அ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் வருமிடத்து, 1995, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் 2011, சனவரி 1ஆம் திகதிக்கு முன்னர் ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப் பகுதிக்கும், இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்க ளிலும் ; அத்துடன்

*(ஆ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் வருமிடத்து, 2011, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கும், இச்சட்டத்துக்கான இரண்டாம் அட்டவணையின் பாகம் II இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும்,*

*ஆடம்பர மோட்டார் வாகன அறவீடொன்று அறவிடப்படுதலும், விதிக்கப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான அறவீடு, இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனத்தின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.".*

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

***11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-*

*"ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன ஆண்டு அறவீடு.*

*5. (பாரவண்டியொன்றைத் தவிர) ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும்-*

*(அ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் வருமிடத்து, 1995, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் 2011, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கும், இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையின் பாகம் I இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும் ; அத்துடன்*

(ஆ) முதலாவது பதிவாண்டு 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் வருமிடத்து, 2011, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஒவ்வோராண்டிற்கும், ஆனால் ஏழாண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்கும், இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையின் பாகம் II இல் தரப்பட்டுள்ள அந்தந்த வீதங்களிலும்,

ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன அறவீடொன்று அறவிடப்படுதலும், விதிக்கப்படுதலும், செலுத்தப்படுதலும் வேண்டும். அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான அறவீடு இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரினால் செலுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**12**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "ஆடம்பர மோட்டார் வாகனங்கள் மீதிலான அறவீட்டு வீதங்கள்" என்ற தலைப்பை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"பாகம் - I

1995, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2011, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்காக :-" ;

(2) முதலாம் அட்டவணையின் முடிவில் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"பாகம் - II

*2011, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்காக :-*

| | ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|---|
| 1. | (2011 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆண்டாகவுள்ள) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆண்டுக்கு | 100,000 |
| 2. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டுக்கு | 78,750 |
| 3. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு | 68,000 |
| 4. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டுக்கு | 57,750 |
| 5. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டுக்கு | 48,000 |

| | | |
|---|---|---|
| 6. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு | 38,750 |
| 7. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறாவது ஆண்டுக்கு | 30,000 |
| 8. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டுக்கு.". | இல்லை. |

உதாரணம்

(அ) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 2007 ஒகத்து 1 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது. அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனத்திற்கு (பதிவுசெய்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டான) 2011 சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டுக்கு ஏற்புடையற்பாலதான அறவீடு ரூ. 30,000/- ஆகும்.

(ஆ) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 2011 ஒகத்து 1 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது. 2011 சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டுக்கு அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனத்திற்கு ஏற்புடையற்பாலதான அறவீடு ரூ. 100,000/- ஆகும்.

(இ) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 2012 ஒகத்து 1 ஆம் திகதி பதிவுசெய்யப்பட்டது. (பதிவுசெய்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டான) 2013 சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டுக்கு அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனத்திற்கு ஏற்புடையற்பாலதான அறவீடு ரூ. 78,750/- ஆகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான இரண்டாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனங்கள் மீதிலான அறவீட்டு வீதங்கள்" என்ற தலைப்பை உடனடுத்து பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும் :-

"பாகம் I

*1995, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2011, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்காக :-" ;*

(2) இரண்டாம் அட்டவணையின் முடிவில் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"பாகம் II

*2011, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்காக :-*

| | ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|---|
| 1. | (2011 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆண்டாகவுள்ள) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆண்டுக்கு | 50,000 |
| 2. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டுக்கு | 39,375 |
| 3. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு | 34,000 |
| 4. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டுக்கு | 28,875 |
| 5. | (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டுக்கு | 24,000 |

| ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|
| 6. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு | 19,375 |
| 7. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறாவது ஆண்டுக்கு | 15,000 |
| 8. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டுக்கு.". | இல்லை. |

*முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**14.** முதன்மைச் சட்டவாக்கத்துக்கான மூன்றாம் அட்டவணை இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) "ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனங்கள் மீதிலான அறவீட்டு வீதங்கள்" என்ற தலைப்பை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்து வதன் மூலமும் :-

"பாகம் I

1995, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2011, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்காக :-" ;

(2) மூன்றாம் அட்டவணையின் முடிவில் பின்வரும் பாகத்தைச் சேர்ப்பதன் மூலமும் :-

"பாகம் II

*2011, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் ஆண்டுக்காக :-*

| ஆண்டு | வீதம் ரூபா |
| --- | --- |
| 1. (2011 சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆண்டாகவுள்ள) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ளதோ அந்த ஆண்டுக்கு | 20,000 |
| 2. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டுக்கு | 15,750 |
| 3. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு | 13,600 |
| 4. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டுக்கு | 11,550 |

| ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|
| 5. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டுக்கு | 9,600 |
| 6. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு | 7,750 |
| 7. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறாவது ஆண்டுக்கு | 6,000 |
| 8. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 2011 சனவரி 1 ஆம் திகதியன்றோ அல்லது அதன் பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டுக்கு.”. | இல்லை. |

கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயன்.

**15.** இச்சட்டத்தினால் முதன்மைச் சட்டவாகத்துக்குச் செய்யப்பட்ட திருத்தம், எல்லா நோக்கங்களுக்காகவும், 2011, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டதாகக் கருதப் படுதல் வேண்டும்.

**16**. எவரேனுமாள் அல்லது ஆட்கள் குழு, 2011, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்றதும், இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிவரையிலானதுமான காலப்பகுதியின் போது, இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான அறவீட்டைச் சேகரிக்குமிடத்து, அத்தகைய ஆள் அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் செய்யப்பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும் ; அத்துடன் அவருக்கு, அத்தகைய சேகரிப்புத் தொடர்பில், எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படுகின்றது. செல்லுபடியாக்குதல்.

**17**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்